# DEPOSITION OF WITNESS
# CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
# IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 59 /2020

Deposition of Witness : DW1

| | | | |
|---|---|---|---|
| Name | : ராமர் | Father's/Husband's Name : | ராஜப்பா |
| Village | : ஏத்தக்கோவில் | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.02.2026

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1)** எனக்கு எழுத படிக்கத் தெரியாது. படிப்பதை கேட்டு புரிந்து கொள்வேன். எனது எதிர்வழக்குரையில் வாதிகள் பிரதிவாதியை ஏமாற்றி 14.07.1992ம் தேதியில் வழக்கு சொத்து கிரைய ஒப்பந்தத்தை எழுதி பதிவு செய்து கொண்டார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தத்தின் அடிப்படையில் தான் அசல் வழக்கு எண்.7/2002 என்ற வழக்கு தாக்கல் செய்து எனக்கு எதிராக தீர்ப்பாணை பெற்றிருக்கிறார்கள் என்றால் அந்த வழக்கு பற்றி எனக்கு தெரியாது. அந்து தீர்ப்பாணையை நிறைவேற்ற E.P.No.23/2006 என்ற மனு தாக்கல் செய்து கிரைய பத்திரம் நீதிமன்றத்தில் எழுதி பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக் குவிபரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2) தாவா சொத்திற்கு வாதி பெயரில் தான் பட்டா, சிட்டா, அடங்கல் இருக்கிறது என்றால் சரியல்ல, எனது பெயரில் தான் இருக்கிறது. பி.வா.சா.ஆ.2 என் பெயரில் இருக்கும் பழைய பட்டா பாஸ் புக் என்றால் சரிதான். எனது பெயரில் கிஸ்தி இரசீது தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்திற்கான பட்டா சிட்டா கிஸ்தி இரசீது வாதி பெயரில் இருப்பதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாமல் தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி வழக்கு விபரங்கள் தெரிந்தும் கடந்த 2014ம் ஆண்டு தாவா சொத்தை எனது மக்களுக்கு தானம் கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை

Taken down by me/before me in open court on 10.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2026.02.10 17:06:44 +0530

District Munsif,
Aundipatti.